# சங்க இலக்கியத்தில் வாணிகம்

**சு. சுவேதா**
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783916

***ஆய்வுச்சுருக்கம்***

*பண்டைய காலத்திலிருந்து பண்டமாற்று முறையை நமது தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர். தற்பொழுது வாணிகம் என்ற முறையில் பண்டமாற்று முறை நடந்து கொண்டு இருக்கிறது. இதில் முதலில் வணிகத்தில் மனிதனுக்கு தேவையான பொருட்களை இலாப நோக்குடன் செயல்படுத்துகின்றனர். அடுத்து நாளங்காடியில் மூலம் பொருட்களை வாங்கி விற்கின்றனர். உப்பு வணிகர்கள் அவர்களது நிலத்தில் உற்பத்தி செய்து வாழ முடியாததால் உணவுப் பொருட்களை மட்டும் சேகரித்துக் கொள்கின்றனர். நெய்தல் நில மக்கள் அங்கு விளையும் உப்பை வேறு நிலத்தில் விற்று அதற்கு ஈடாக நெல்லை பெற்று வந்தனர். சங்ககாலத்தில் அனைத்தையும் பண்டமாற்று முறை செய்துள்ளனர். அதில் தயிரும் ஒன்று. மற்ற நிலங்களுக்கு கொடுத்து அதற்கு மாறாக நெல்லைப் பெற்று வந்துள்ளனர். புகார் துறைமுகத்திலிருந்து தங்கம் பொன்மணிகளும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது போன்ற வணிக தகவல்களை சங்க நூல்கள் வழி ஆராயப்பட்டுள்ளது.*

*சங்க கால மக்கள் வாணிபத்தை பண்டமாற்று முறையில் செய்தனர். சங்ககால மக்கள் தம்மிடம் அதிகமாக உள்ள பொருட்களை பிறரிடம் கொடுத்து தமக்கு தேவையான பொருட்களை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இதற்கு பண்டமாற்று முறை வாணிகம் என்று பெயர். அந்த வகையில் எட்டுத்தொகை பத்துப்பாட்டில் வாணிகம் குறித்த பதிவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## வணிகம்

*வணிகம் அல்லது வர்த்தகம் என்பது மனிதனது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் லாப நோக்குடைய அல்லது லாப நோக்கமற்ற ஒரு பொருளாதார செயற்பாடு ஆகும். வணிகம் என்பது வியாபாரத்தையும் அதன் துணைப் பணிகளான போக்குவரத்து வங்கியியல், காப்பீடு, பண்டகக் காப்பகம், தகவல் தொடர்பு, விளம்பரம் போன்ற பிற நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது ஆகும்.*

## நாளங்காடி

*வணிகத்திற்கு முக்கியமான இடமான நான்மாடக்கூடல் ஆகிய மதுரையில் வணிகப் பொருட்கள் அனைத்தும் நாளங்காடியில் குவிக்கின்றன. அப்படிப்பட்ட நாளங்காடியில் மக்கள் கூட்டம் திருவிழா காலம் போல அலை மோதுகின்றன என்பதை,*

***“மழை கோளக் குறையாது புனல் புகமிகாது***
***கரை பொருது இரங்கும் முந்நீர் போல”***

***- (ம.கா.வ.எ.424,425)***

*என்ற மதுரைக்காஞ்சி அடியில் நாளங்காடி மேகங் கொள்ளுதலால் குறையாமலும் ஆற்று நீர் வந்து சேர்தலால் மிகாமலும் கரையில் மோதி முழங்கும் கடல் போல வந்து கொள்ளுதலால் குறையாமலும் வணிகர் பலரும் கொண்டு வருதலால் எப்பொழுதும் பண்டங்களாலும் ஆரவாரத்தாலும் நிறைந்திருந்தது.*

மாடங்களாலே விளக்கமுற்ற மிக்க புகழை உடையதாயிருந்தது. நான்மாடக்கூடலாகிய மதுரை கண் உள்ளது. நாளங்காடி இங்கு ஆரவாரம் திருவிழாவை காண அவ்விழாவிற்கு கூடி வந்த நாட்டு மக்களின் ஆரவாரம் செய்தல் போல் இருந்தது. அங்காடி என்பது முன்னொரு காலத்தில் தமிழ்நாடு எங்கும் வழங்கிய சொல். தெருவிலே கூவி விட்டு செல்வோரை அது குறிக்கிறது.

***அங்காடி நாய் போல் அலைந்து திரிந்தேனே'***

என்ற வரியை ஆராயும் போது அங்காடி மணிமேகலையிலும் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**உப்பு வணிகர்**

பண்டைய காலத்தில் பெருமணல் நிலம் என தொல்காப்பியம் கூறும் நெய்தல் எனப்பட்ட தமிழ்நாட்டு கரையோர பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்கள் தங்கள் நிலத்தில் எந்த பொருட்களையும் விளைவித்து உற்பத்தியில் ஈடுபடவில்லை. அவர்கள் வாழ்ந்து வந்த நிலப்பகுதி தானியங்களை விலை விற்பதற்கு தகுதியற்றதாக இருந்தது. இவர்களது குடில்களில் யாவும் உணவு சேகரிக்கும் இடமாகவும் விளங்கியது. இவர்களை சங்க இலக்கியங்கள் பரதவர் என்று குறிப்பிடுகின்றன என்பதை,

***"சிறுதுளைக்கொடு நகம் நெறிபட நிரைத்த***
***பெருங்கயிற்று ஒழுகை மருங்கில் காப்பச்"***

*- (ப.பா.வ.எ.27)*

என்ற பட்டினப்பாலை வரிகள் விளக்குகின்றன. கடற்கரைக்கு அப்பால் உள்ள உள்நாடுகளும் மலை நாடுகளுக்கும் எருதுகள் உப்பு வண்டியை இழுத்துக் கொண்டு போகின்றன என்பதை,

***கலியுப்பு முகந்து கன்னொடு மடுக்கும்***
***ஆறைச் சாகாட்டு ஆழ்ச்சிபோக்கும்***
***உரனுடை நோன் தான் பகடு[2]***

என்ற பாடல் வரிகள் புறநானூற்றில் குறிப்பிடப்படுகிறது.

**பண்ட மாற்றம்**

தன்னுடைய நிலங்களில் விளையக்கூடிய பண்டங்களை கொண்டு சென்று மற்ற நிலங்களில் உள்ள மக்களிடம் விற்றுவிட்டு அதற்கு மாற்றாக அந்நிலங்களில் உள்ள பண்டங்களை வாங்கி வருவதற்கு பண்டமாற்றம் என்று அழைக்கப்படுகிறது.

நெய்தல் நில மக்கள் உப்பை விளைவித்து விலைக்கு கொடுத்து விட்டு அதற்கு ஈடாக நெல்லை பெற்று வந்தனர் என்பதை,

***உப்பை மாறி வெண்ணெய் தரீ இய***
***உப்பு விளை கழனிச் சென்றனள் யாவும்***
***பனி இரும்பரப்பின் சோர்ப்பதற்கு***
***இனிவரின் எளியன்[3]***

என்ற வரியில் குறுந்தொகை தெளிவாக்குகின்றது.

**தயிர் கொடுத்து நெல்**

சங்க காலத்து மக்கள் தங்கள் வீட்டிற்கு தேவையான பொருட்களை மாற்றிக் கொண்டு வந்தனர். அப்படி மாற்றிய பொருட்களில் தயிரும் ஒன்று சங்க மகளிர் தயிரைக் கொண்டு சென்று மற்ற நிலங்களில் விலைக்கு கொடுத்து அதற்கு மாறாக நெல்லை பெற்று வந்தனர் என்பதை,

***கானுறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்***
***மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்***
***தயிர் கொடு வந்த தசப்பும் நிறைய***
***ஏரின் வாழ்நர் போரில் அறிவையர்***
***குளக்கிழ் விளைந்த களங்கோள் வெண்ணெல்***
***முகுந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்***
***தென்னம் பொருப்பன் நன் னொடு[4]***

எனப் புறநானூறு வாயிலாக வெளிப்படுகிறது.

**புகார் துறைமுகத்தின் வணிகம்**

புகார் துறைமுகத்தை கயவாய் என்றார். சங்க கால வாழ்வியல் ஆசிரியர் புகார் துறைமுகத்தையும் அங்கே நடைபெற்ற செயல்பாடுகளை பற்றியும் பட்டினப்பாலை விளக்கம் தருகிறது.

குதிரைகள் புகாரியில் வந்து இறங்கின. தங்கம், பொன்னும், மணியும், மேலை நாடுகளிலிருந்து சந்தனமும், அகிலும், முத்து

பவளமும், காவிரி உணவு நிலத்து திண்பண்டங்கள், ஆடைகள் ஆகியவை புகார் நகரத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டன. அணிகலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**முடிவுரை**

புகார், கொற்கை, புதுச்சேரி, முசிறி, தொண்டி, கங்கை, காவிரி போன்ற துறை முகங்களில் பல வெளிநாட்டு கப்பல்கள் வந்தடைந்தன என்பதை அறிய முடிகிறது. வேளாண் தாவர பொருட்கள் மற்றும் இயற்கையில் கிடைக்கும் தாவர பொருட்கள் இவ்வாணிபத்தில் பெரும் பங்கு வகித்தது. பண்டமாற்று முறையில் உவணர்கள் உப்பை கொடுத்து நெல் தயிர் போன்றவற்றை வாங்கியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ந.மு.வெங்கடசாமி நாட்டார், மணிமேகலை, பா.240.
2. புலியூர்கேசிகன், புறநானூறு, பா.353.
3. புலியூர்கேசிகன், குறுந்தொகை, பா.269
4. புலியூர்கேசிகன், புறநானூறு, பா.239.

**துணை நூற்பட்டியல்**


1. துரைசாமிப்பிள்ளை.சு.ஔவை, மணிமேகலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154, டி.டி.கே.சாலை, சென்னை, மூன்றாம் பதிப்பு - திசம்பர் -1994.
2. புலியூர்கேசிகன், குறுந்தொகை, முத்தமிழ் பதிப்பகம், 9அ, மேக்மில்லன் காலணி, நாகைநல்லூர், சென்னை, முதற்பதிப்பு - ஆகஸ்ட் 2012.
3. புலியூர்கேசிகன், புறநானூறு, கே.வி.ஆர் பதிப்பகம், சிங்கண்ண செட்டி தெரு, சித்தாதிரிப் பேட்டை, சென்னை.
4. மோகன். இரா. முனைவர், பத்துப்பாட்டு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) விட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.